செ.வெ.எண்: 54 நாள் : 28.10.2021

**பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீவெங்கட பிரியா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப. அவர்கள் இன்று (28.10.2021) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**அதன் விபரம் பின்வருமாறு:**

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, எசனை கீழக்கரை கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதையும், மேலும் மண் பரிசோதனை செய்து மண்வள அட்டை பரிந்துரையின் அடிப்படையில் உரமிடுதல், பசுந்தாள் பயிரினை பயிரிட்டு மடக்கி உழுதல் போன்ற பணிகளையும், இயற்கை முறையில் கடலை விவசாயம் செய்யும் முறைகளையும் வயல்வெளிகளுக்கு சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, மேலும் முழு மானியத்தில் விவசாயிகு தார்பாய் மற்றும் திரவ உயிர் உரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் எசனை ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் ஒருங்கிணைந்த தோட்டக்கலைத்துறை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பரப்பு அதிகரித்தல் இனத்தில் 50 சதவீதம் மானியத்தில் (ரூ.80,000) ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் நிரந்தர பந்தல் அமைத்து திராட்சை சாகுபடி மற்றும் ஊடுபயிராக முட்டைக்கோஸ் சாகுபடி செய்துள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். எசனை கீழக்கரை பகுதியில் இயற்கை இடுபொருள் மூலம் இயற்கை முறையில் கடலை பயிரிடப்பட்டுள்ளதையும், சிப்பி காளான் உற்பத்தி செய்யும் கூடத்தினையும் பார்வையிட்டார். மேலும் விவசாயிகளிடம் இயற்கை வேளாண்மைக்கு தேவையான இயற்கை இடுபொருள் அருகிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கும் வகையிலும் விற்பனை செய்யும் வகையிலும் செய்திட வேண்டும். அதற்கு உங்களுக்கு தேவையான உதவிகளை மாவட்ட நிர்வாகம் உருவாக்கி கொடுக்கும் என தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, ஆலம்பாடி ஊராட்சிக்குட்பட்ட, பகுதிகளில் வேளாண்மைத்துறையின் சார்பில் பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு திட்டத்தில் பூச்சிகளை கட்டுப்படுத்த வரப்பு பயிராக தட்டைப் பயிர், ஆமணக்கு பயிரிடப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மானிய விலையில் பூஞ்சான் நோய் தாக்காமல் இருப்பதற்காக பருத்தி பயிருக்கு பாதுகாப்பு மருந்தினை விவசாயிகளுக்கு வழங்கினார். அதனைத்தொடர்ந்து ஆலம்பாடி கிராமத்தில் கூட்டுப்பண்ணைய திட்டத்தின் கீழ் அரசு மானியத்தில் விவசாய உற்பத்தியாளர் குழுவிற்கு வழங்கப்பட்ட சுழல்கலப்பை மற்றும் களையெடுக்கும் கருவி ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு.கருணாநிதி, துணை இயக்குநர்கள் திருமதி இந்திரா, திரு.ஏழுமலை, திருமதி கீதா, உதவி இயக்குநர் (வேளாண்மை பொறியியல்துறை) திரு.இலாட்வின் இஸ்ரேல், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) திரு.பூவலிங்கம், உதவி செயற்பொறியாளர்(வேளாண்மை பொறியியல்துறை) திரு.அறிவழகன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம்.**